தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மாதுளையில் வேர்முடிச்சு நூற்புழு பாதிப்பு

தமிழ்நாட்டில் மாதுளைப்பழப்பயிர் கோவை, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் சுமார் 113 எக்டர் அளவில் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பழப்பயிரில் இலைகள் வெளிர்தல், வளர்ச்சிக் குன்றுதல், பழ உற்பத்திக் குறைதல் போன்ற பிரச்சனைகளை இப்பழ உற்பத்தியாளர்கள் சமீபகாலமாக சந்தித்து வருகிறார்கள். ஆகையால் பாதிக்கப்பட்ட மாதுளை பழத்தோட்டத்தில் ஆய்வு மேற்கொண்டதில் வேர்முடிச்சு நூற்புழுக்கள் அதிகளவில் காணப்படுவதாக கண்டறியப்பட்டது. இந்நூற்புழுக்கள் பாதிப்பினால் உண்டாக்கப்படும் வேர்முடிச்சுகளும் அதனால் ஏற்படுத்தப்படும் வினையியல் மாற்றங்களான நீர் மற்றும் சத்துக்களை சரிவர உறிஞ்சமுடியாத நிலையே மேற்கூறிய அறிகுறிகளுக்கு காரணமாக உள்ளது.

அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இப்பிரச்சனை வெகு காலகமாக காணப்பட்டு வருகிறது. அண்மைக் காலங்களில் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்து பழச் செடிகள் தருவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் இப்பழச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு தருவிக்கப்பட்ட பகுவா போன்ற பழச் செடி நாற்றுகள் மூலம் இவ்வேர்முடிச்சு நூற்புழுக்கள் தமிழ்நாட்டில் பரவியிருக்கக் கூடும் என்று நம்பப் படுகிறது.

ஆகையால் இப்பழப்பயிர் உற்பத்தியாளர்கள் தங்களுடைய மாதுளை பழத்தோட்டத்தில் இருந்து மண் மற்றும் வேர்மாதிரிகளை நூற்புழு ஆய்விற்கு உட்படுத்தி உறுதிசெய்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்சமயம் மாதுளைப் பழப்பயிரில் இந்நூற்புழுக்களை கட்டுப்படுத்ததுவத குறித்தான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆயினும் வருமுன் என்ற முறையில் தொழுஉரம் (20 டன் / எக்டர்), வேப்பம்புண்ணாக்கு (250 கிராம் / செடி) மற்றும் பூஞ்சாண உயிரியல் கொல்லியான

*பேசில்லோமைசிஸ் லிலாசினஸ்* (25 கிராம் / செடி) போன்றவற்றை இட்டு இந்நூற்புழுக்களை கட்டுப்படுத்தி பழ மகசூலை அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முனைவர். கி. பூர்ணிமா, செள. முனைவர். ராமகிருஷ்ணன் மற்றும்
முனைவர். ச. சுப்ரமணியன்
நூற்புழுவியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-6611264

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்







